2010 ஏப்ரல் 26]

திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள அறநிலையத் துறைக்குச் சொந்தமான பல கோயில்கள் குடமுழுக்கு செய்து, 12 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்ட கோயில்களை இந்த அரசு சிறப்புக் கவனம் செலுத்தி, குடமுழுக்கு செய்வதற்கு முன்வருமா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப்போல, மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களுடைய அறிவுரையின்படி சிறப்புக் கவனம் இந்த அரசு செலுத்துகின்ற காரணத்தாலேதான் 4 ஆண்டுக் காலத்தில், இதுவரை கடந்த எந்த ஆட்சிக் காலத்திலும் நடந்திராத அளவுக்கு முழு வீச்சில் திருப்பணிகளும், குடமுழுக்குகளும் நடந்து, 4000-க்கும் மேற்பட்ட திருக்கோயில்கள் இந்தக் குறுகிய 4 ஆண்டுக் காலத்திலே சீர் செய்யப்பட்டிருக்கின்றன என்பதையும், அந்தத் திருப்பணிகளைச் செய்வதற்கு பல்வேறு நிதியாதாரங்களை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பெற்றுத் தந்திருக்கிறார்கள் என்பதையும் நான் அறிவித்திருக்கிறேன். ஆகவே, அந்த வகையிலே, திருப்பணிகளை இன்னும் விரைந்து செயல்படுத்துவதற்குத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 97, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

97—

தரம் உயர்த்துதல்

***104208—திரு. ஆர். சாமி:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் நகராட்சி, கருத்தப்புளியம்பட்டி அரசுத் துவக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

[2010 ஏப்ரல் 26

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மேலூர் நகராட்சி, கருத்தப்புளியம்பட்டி அரசுத் துவக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தும் நிலை எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி.

திரு. ஆர். சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலூர் தொகுதியில் உள்ள மேலூர் நகராட்சி, கருத்தப்புளியம்பட்டி கிராமத்தில் அரசுத் துவக்கப் பள்ளி இயங்கி வருகிறது. அதை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திக் கொடுக்க வேண்டும். அந்தப் பகுதியில் மொத்தம் 4 வார்டுகள் இருக்கின்றன. அதாவது, 24, 25, 26 மற்றும் 27 என நகராட்சி வார்டுகள் இருக்கின்றன. மேலும் நகரைவிட்டு ஒதுக்குப்புறமாக கிராமப்புறத்தின் தென் பகுதியில் இயங்கி வருகின்றது அந்தத் துவக்கப் பள்ளி. இந்த 4 வார்டுகளிலிருந்தும் மேலூர் நகராட்சியின் நடுநிலைப் பள்ளிக்குத்தான் மாணவர்கள் வர வேண்டிய சூழ்நிலை இருக்கிற காரணத்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து இந்த ஆண்டு அதை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த முன்வருவார்களா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது 10 மாணவர்கள், 7 மாணவிகள் என்று மொத்தம் 17 பேர்கள் இந்தக் கருத்தப்புளியம்பட்டி தொடக்கப் பள்ளியில் 5 ஆம் வகுப்பில் படித்துக்கொண்டிருக்கிறார்கள். அங்கேயிருந்து 2 கி.மீ. தூரத்திற்குள்ளேயே பல நடுநிலைப் பள்ளிகள் இருப்பதாகத் துறைவாயிலாக எனக்குத் தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர், அண்ணன் திரு. சாமி அவர்கள் இந்த அவையிலே இதை வலியுறுத்திச் சொல்லியிருக்கக்கூடிய காரணத்தால் இதை ஆராய்ந்து பார்த்து நிச்சயமாக அங்கே அந்தத் தேவை இருக்குமென்று சொன்னால் அரசு இந்த ஆண்டில் உரிய நடவடிக்கை எடுக்கும்.

2010 ஏப்ரல் 26]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி.

திரு. ஆர். சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலூர் தொகுதியிலே மேலூரில் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் மிகச் சிறப்பாக 3,800 மாணவிகள் படித்து வருகிறார்கள். அதிலே பெற்றோர்—ஆசிரியர் சங்கத் தலைவராக நான் இருந்து வருகிறேன். அங்கு என்மூலமாகத் தனிப்பட்ட முறையில் பல இலட்ச ருபாய் மதிப்பிலான கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அங்கே +1, +2-விலே 1,200 மாணவிகள் படிக்கிறார்கள். ஒரே ஒரு ஆங்கில ஆசிரியர்தான் இருக்கிறார். தனியார் பள்ளியைவிட—மேலூரில், மதுரை மாவட்டத்தில்—சிறந்த பள்ளியாக அது நடந்து கொண்டிருக்கிறது. 1,200 மாணவிகள் படிக்கின்ற அந்தப் பள்ளியில் ஒரே ஒரு ஆங்கில ஆசிரியர்தான் இருக்கிறார். அதேபோல் +1, +2 விலே வணிகவியல் பிரிவில் 504 மாணவிகள் படிக்கிறார்கள். அதற்கும் ஒரே ஒரு ஆசிரியர்தான் இருக்கிறார். எனவே, இந்த ஆண்டு கூடுதலாக ஆசிரியர்களை நியமித்துக் கொடுக்குமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர்மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலூர் வட்டாரத்திலே மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடக்கூடிய அந்தப் பள்ளி சிறப்பாக செயல்பட்டுவரக்கூடிய பள்ளி என்பதை நானும் அறிவேன். மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் சாமி அவர்கள் இங்கே சொன்னதைப்போல, இந்த ஆண்டு கூடுதலான ஆங்கில ஆசிரியர்களும், இதர ஆசிரியர்களும் அந்தப் பள்ளிக்கு நியமிக்கப்பட அரசு உரிய நடவடிக்கையை இந்தக் கல்வி ஆண்டிலேயே எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. நெடுஞ்செழியன்.

டாக்டர் க. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதியில் அருந்ததியின மக்கள் அதிகமாக வாழ்கின்ற பகுதி சேளூர் ஊராட்சி. அந்தச் சேளூர் ஊராட்சியிலே ஒரு நடுநிலைப் பள்ளி இருக்கிறது.

ஏறத்தாழ 1,500 மக்கள் தொகை கொண்ட அந்தக் காலனிப் பகுதியிலே படிக்கின்ற மாணவர்கள் குறைவாக இருந்தாலும், அதைச் சிறிது கவனத்திலே எடுத்துக்கொண்டு, அந்த நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தித் தர அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின்கீழ் 200 பள்ளிகள் தேர்வு செய்யப்பட்டு அதற்கான அரசாணைகள் கடந்த மார்ச் மாதமே வழங்கப்பட்டுவிட்டது. இருந்தாலும், இந்தப் பேரவையிலே தொடர்ந்து பல உறுப்பினர்கள் இந்தக் கோரிக்கையை எழுப்பக்கூடிய காரணத்தால் வரக்கூடிய ஜூன் மாதத்திலே புதிதாக டெல்லியிலே கூடவிருக்கக்கூடிய அந்த P.A.B. Meeting, - Plan and Annual Budget Meeting-லே புதிய பள்ளிகளைத் தரம் உயர்த்துவதற்கான அந்த முன்மொழிவுகளை அரசின் சார்பிலே எடுத்துச் செல்கிறபோது நீங்கள் குறிப்பிடக்கூடிய அந்தப் பள்ளியையும் இணைத்துக்கொள்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 98, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சந்திரகாசி, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

98—

சத்துணவுக் கூடம்

***27847—திரு. மா. சந்திரகாசி:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வரகூர் தொகுதி, வேப்பூர் ஒன்றியம், கிழுமத்தூர் ஊராட்சியில் சத்துணவுக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?